# 15

# புதிய உடன்படிக்கை

## [8:6-13]

"பழைய ஏற்பாடு" மற்றும் "புதிய ஏற்பாடு" - இவைகள் பொதுவான பயன்பாட்டில் இருக்கும் சொற்றொடர்களாக உள்ளன. பழைய ஏற்பாடு யூதர்களுக்கானதாக இருக்கையில், புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களுக்கானதாக உள்ளது என்பதை, நம்மில் பெரும்பான்மையானவர்கள்[1] அறிந்திருக்கிறோம், ஆனால் ஏற்பாடுகளைப் பற்றிச் சிலர் அறிந்துள்ள யாவுமாக அது உள்ளது. இருப்பினும் "ஏற்பாடு" (மற்றும் சில வேளைகளில் "உடன்படிக்கை") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகளில் - நாம் தவறவிடக் கூடாத - அழகிய கருத்துக்களும் உள்ளன. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், 8ம் அதிகாரத்தின் பிற்பகுதியில், *புதிய* ஏற்பாடாகிய *புதிய* உடன்படிக்கையைப் பற்றிப் பேசினார்.

## ஒரு *புதிய* உடன்படிக்கை

**இது ஒரு உடன்படிக்கையாக உள்ளது**

ஒருவேளை நாம் முதலில், "உடன்படிக்கை" என்ற வார்த்தையை வலியுறுத்த வேண்டி இருக்கலாம். NASB வேதாகமத்தில் "உடன்படிக்கை" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள சொற்றொடர் KJV வேதாகமத்தில் சிலவேளைகளில் "ஏற்பாடு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விரு சொற்றொடர்களுமே, "உடன்படிக்கை" என்று ஒருவேளை சிறப்பாக மொழிபெயர்க்கப்படக்கூடிய ஒரே கிரேக்க வார்த்தையில் இருந்தே மொழிபெயர்க்கபபட்டுள்ளன.[2] "பழைய ஏற்பாடு" மற்றும் "புதிய ஏற்பாடு" என்பதற்குப் பதிலாக, "பழைய உடன்படிக்கை" மற்றும் "புதிய உடன்படிக்கை" (எபிரெயர் 8:13; காண்க 8:8; 9:15; 12:24) அல்லது "முதலாம் உடன்படிக்கை" மற்றும் "இரண்டாம் உடன்படிக்கை" (8:7; காண்க 9:1, 15, 18) என்பவை போன்ற சொற்றொடர்களை வேதாகமம் பயன்படுத்துகிறது.

"உடன்படிக்கை" என்று இந்த சந்தர்ப்பப் பொருளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "உடன்படிக்கை" என்பதற்கான (*suntheke* என்ற) வழக்கமான கிரேக்க வார்த்தையாக இருப்பதில்லை. மாறாக இங்குள்ள (*diatheke* என்ற) கிரேக்க வார்த்தை சாதாரணமாக *உயில்களைக்* குறிப்பிட்டது.[3] ஒரு உடன்படிக்கையைப் பற்றி நாம் நினைக்கும்போது, வழக்கமாக நாம், இருசாராருக்கு இடையில் ஏற்படுத்தப்படும் ஒரு ஒப்பந்தத்தைப் பற்றியே நினைக்கிறோம். ஒருகருத்தில் புதிய ஏற்பாடு இவ்வாறாகவே உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்ய ஒப்புக்கொள்கிறோம், மற்றும் தேவன் நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்கிறார். இருப்பினும் மனித உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைப்

பொறுத்தமட்டில், ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் பேரம்பேசுதல் என்பது அடிக்கடி இருக்கிறது. பழைய உடன்படிக்கையைப் பொறுத்தமட்டில் விஷயம் அவ்வாறு இருந்தது இல்லை மற்றும் புதிய உடன்படிக்கையிலும் விஷயம் அவ்வாறு இருப்பதில்லை, பழைய ஏற்பாட்டின் நிபந்தனைகளில் இஸ்ரவேல் மக்கள், கூற எதுவும் இருந்ததில்லை, மற்றும் புதிய ஏற்பாட்டின் நிபந்தனைகளில் நீங்களும் நானும் கூற எதுவும் இருப்பதில்லை. இவ்விஷயத்தில், புதிய உடன்படிக்கையானது அதிகமாக ஒரு உயிலைப் போன்றதாக உள்ளது (காண்க 9:16, 17): உயிலினால் பயன் அடைபவர் உயிலின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ முடியும், ஆனால் அவர்கள் அவற்றை மாற்ற இயலாது.

**இது புதியதாக உள்ளது**

அடுத்ததாக நாம், கிறிஸ்துவின் உடன்படிக்கையினுடைய *புதிதான தன்மையை* வலியுறுத்துவது அவசியமாக இருக்கலாம். "புதிய" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*kainos* என்ற) வார்த்தை, வடிவத்தில் அல்லது பண்பில் "புதியது" அல்லது பழையதுடன் நேரெதிராக ஒப்பிடப்படும் வகையில் மாறுபட்ட இயல்புடையது என்று அர்த்தப்படுகிறது.[4] புதிய உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பாக இருப்பதில்லை; மாறாக இது உடன்படிக்கையின் ஒரு *புதிய வகையாக* உள்ளது.

*புதிய* உடன்படிக்கை தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்று காண்பிக்க, எரேமியா 31:31-34ல் இருந்து எழுத்தாளர் மேற்கோள் காண்பித்தார்: "இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது" (8:8; காண்க எரேமியா 31:31). சாலொமோன் அரசருடைய மரணத்திற்குப் பின்பு, இஸ்ரவேல் நாடு பிரிவுபட்ட போது, அது இஸ்ரவேல் மற்றும் யூதா என்ற பிரிவுபட்ட இரண்டு தனித்தனி அரசுகளாயிற்று. யூதர்கள் அடிமைத்தளையில் கூட்டிச் செல்லப்பட்டதன் விளைவாக, அவர்களின் இருதயத்தில் ஏற்பட்ட மாற்றத்தையே, எரேமியா புத்தகத்தில் உள்ள வாக்குத்தத்தம் தோற்றகாலத்தில் குறிப்பிட்டது என்று சிலர் நினைக்கின்றனர். விஷயம் அவ்வாறாக இருந்தாலும் இல்லை என்றாலும், இது பழைய ஏற்பாட்டின் காலங்களில் முற்றிலும் நிறைவேற்றப்படாத தீர்க்கதரிசனமாக உள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இதை, கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையில் முழுமையாக மற்றும் நிறைவாக நிறைவேற்றபட்டது என்று சரியாகவே விளக்கம் அளித்தார்.

## புதிய உடன்படிக்கையின் பண்புகள்

புதிய உடன்படிக்கை *மேன்மையானதாக* உள்ளது என்பது அதன் முதன்மைப் பண்பாக உள்ளது (7:22): இது மேன்மையான மத்தியஸ்தரான இயேசுவைக் கொண்டுள்ள காரணத்தால் (8:6அ; காண்க கலாத்தியர் 3:19) *மேன்மையானதாக* உள்ளது, மற்றும் இது மேன்மையான வாக்குத்தத்தங்களின்மீது நிலைநாட்டப்பட்டுள்ள காரணத்தால் மேன்மையானதாக உள்ளது (8:6). இது *புதியதாக* உள்ளது என்பது (மேலே குறிப்பிடப்பட்டபடி) இதன் இன்னொரு

*பண்பாக உள்ளது. கூடுதலான மற்ற பண்புகளையும் நமது வசனப்பகுதி கருத்தாகத் தெரிவிக்கிறது.*

***பிழையற்ற உடன்படிக்கை***

*முதலாம் உடன்படிக்கையைப் போலின்றி, புதிய உடன்படிக்கையானது மக்களைத் தேவனிடத்தில் ஒரு நிரந்தமான ஐக்கியத்திற்குள் கொண்டு வருகிறது என்ற வகையில் இது பிழையற்ற ஒன்றாக உள்ளது (8:7). இதில் பிழை எதுவும் இருப்பதில்லை மற்றும் இது நமது பிழைகளுக்கு (பாவமன்னிப்பு என்ற) அளிப்பை ஏற்படுத்துகிறது.*

***ஆவிக்குரிய உடன்படிக்கை***

*இது (சபை என்ற; காண்க 1 பேதுரு 2:9, 10) ஆவிக்குரிய மக்களுடனான ஆவிக்குரிய உடன்படிக்கையாக உள்ளது. எரேமியா தமது தீர்க்கதரிசனப் புத்தகத்தை எழுதிய வேளையில், இஸ்ரவேலின் வடக்கு இராஜ்யம் அசீரிய அடிமைத்தளையில் கூட்டிச் செல்லப்பட்டிருந்தது, மற்றும் விரைவிலேயே தெற்கு இராஜ்யமான யூதாவும் பாபிலோனிய அடிமைத்தளையில் கூட்டிச் செல்லப்பட இருந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, அடிமைத்தனத்தில் இருந்து கடைசியில் திரும்பிய யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் அல்ல, ஆனால் ஆபிரகாமின்* ஆவிக்குரிய *சந்ததிக்கே (காண்க கலாத்தியர் 3:29), அதாவது கிறிஸ்தவர்களுக்கே இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நடைமுறைப்பட்டது என்று செயல்விளைவில் கூறினார்.*

***உள்ளான உடன்படிக்கை***

*இது ஒரு உள்ளான உடன்படிக்கையாக இருக்கிறது (எபிரெயர் 8:10). இருதயத்திற்கான மார்க்கத்தின் அவசியம் பற்றிக் கூறுவதற்கு அதிகமானவற்றை எரேமியா கொண்டிருந்தார் (காண்க எரேமியா 4:4, 14; 5:24; 24:7; 29:13). யோசியாவின் சீர்திருத்தத்தின் விளைவாக, பழைய ஏற்பாட்டின் புறம்பான சமயச் சடங்குகளில் பல கடைப்பிடிக்கப் பட்டுக்கொண்டிருந்தன; ஆனால் மக்கள் இன்னமும் இருதயத்தைப் புறக்கணித்தே இருந்தனர். புதிய உடன்படிக்கை இருதயத்தில் எழுதப்பட வேண்டியதாக இருந்தது (காண்க 2 கொரிந்தியர் 3).*

***தனிப்பட்ட உடன்படிக்கை***

*இது ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையாக இருக்கிறது. 8:10ன் கடைசியில் குறிப்பிடப்பட்டது, யாத்திராகமம் 34:7ல் இஸ்ரவேல் மக்களுக்குத் தரப்பட்டதும் எரேமியா 31:31-34ல் புதுப்பிக்கப் பட்டதுமான வாக்குத்தத்தமாக இருந்தது. இருப்பினும், கீழ்ப்படியாமையின் காரணமாக (எபிரெயர் 8:9ஆ) இது ஒருக்காலும் உணர்ந்தறியப்படவில்லை. கடைசியாக இது கிறிஸ்தவத்தில் முழுமையாக உணர்ந்தறியப் படவேண்டியதாக இருந்தது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 21:7). இந்தப் புதிய உடன்படிக்கையின் தனிப்பட்ட இயல்பானது எபிரெயர் 8:11ல் உள்ள "அறிவார்கள்" என்ற வார்த்தையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில் கர்த்தரை "அறிவார்கள்"*

என்பது அவருடன் ஒரு நெருக்கமான, தனிப்பட்ட உறவைக் கொண்டுள்ளதை அர்த்தப்படுத்துகிறது.[5]

**அறியக்கூடிய உடன்படிக்கை**

இது ஒரு அறியக்கூடிய உடன்படிக்கையாக உள்ளது (வசனம் 11). தேவனுடைய மக்களின் பகுதியில் இருந்த ஆவிக்குரிய அறியாமையினால் எரேமியா இளைப்படைந்திருந்தார் (காண்க எரேமியா 3:15; 10:14; 51:17). புதிய உடன்படிக்கையில், "சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும்" எல்லாரும் தேவனை அறிவார்கள். யூதக் குழந்தைகள் தேவனுடனான உடன்படிக்கையில் எப்பொழுதும் பிரவேசித்தனர் என்பதால், இந்த வாக்குத்தத்தம் பழைய ஏற்பாட்டில் நிறைவேற்றப்படக் கூடாதிருந்தது. அவர்கள் பிறந்து ஒருசில நாட்களே ஆன நிலையில், பிறப்பினாலும் விருத்தசேதனச் சடங்கினாலும் அவர்கள் தேவனுடைய மக்களாயினர்; ஆனால் பிற்பாடு அவர்கள் கர்த்தரை அறிந்துகொள்வதற்குப் *போதிக்கப் பட வேண்டியவர்களாக* இருந்தனர். இந்த வாக்குத்தத்தம் கிறிஸ்தவத்தில் உணர்ந்தறியப்பட *முடியும்*, ஏனெனில் அவர் தேவனுடனான உடன்படிக்கையில் பிரவேசிப்பாரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கப் போதிய அளவுக்கு பக்குவமும் போதிய அளவுக்குத் தகவல்கள் அறிவிக்கப்படுதலும் கொண்டிருந்தால் தான் அவர்கள் அதில் பிரவேசிக்க முடியும்; அந்த உறவுமுறைக்குள் பிரவேசிப்பதற்கு *முன்னதாக* அவர் போதிக்கப்படுகிறார் (காண்க 28:18-20; மாற்கு 16:15, 16; யோவான் 1:12, 13; 6:44, 45).

**மீட்கும் உடன்படிக்கை**

இது மீட்கும் உடன்படிக்கையாக உள்ளது (எபிரெயர் 8:12). பழைய உடன்படிக்கை மன்னிப்பைப் பற்றிப் பேசியது, ஆனால் அது ஒரு தற்காலிக மன்னிப்பாகவே இருந்தது (10:3, 4) அது பூரணமான பலியை முன்னெதிர் நோக்கியிருந்தது (காண்க 9:15). புதிய உடன்படிக்கையில்தான், "அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை" என்று தேவன் கூறுகிறார் (10:17).

**நீடித்து நிலைத்திருக்கும் உடன்படிக்கை**

பழைய உடன்படிக்கையுடன் நெரெதிராக ஒப்பிடப்படுகையில், இது நீடித்து நிலைத்திருக்கும், நிரந்தரமாக இருக்கும் உடன்படிக்கையாக உள்ளது (8:13). எபிரெயருக்கு நிருபம் எழுதப்பட்ட நாட்களில் இருந்ததைக் காட்டிலும், இன்றைய நாட்களில், பழைய உடன்படிக்கையை விடப் பழையதாக புதிய உடன்படிக்கை உள்ளது. இது நீண்ட நாட்கள் இருந்துள்ளது ஆனால் இது *புதியதாகவே* நிலைத்துள்ளது. இது இன்றைக்கும் நாளைக்கும் மற்றும் கர்த்தர் வரும் வரைக்கும் தேவனுடைய ஆச்சரியம் நிறைந்த புதிய உடன்படிக்கையாகவே உள்ளது.

## *உங்களுக்கான உடன்படிக்கை*

மத்தேயு சுவிசேஷம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் உள்ளவற்றை நாம் புதிய ஏற்பாடு புதிய உடன்படிக்கை என்று குறிப்பிடுகிறோம்.

*இருப்பினும் நாம், இதன் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருடன் உடன்படிக்கை உறவில் பிரவேசிக்காத வரையிலும், இது உண்மையில் நமக்கான புதிய உடன்படிக்கையாக இருப்பதில்லை என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியம். 2 கொரிந்தியர் 3ல் பவுலின் சொற்றொடராக்கத்தைத் தழுவிக்கூறுவதென்றால், தாள்களில் அச்சிட்ட வெறும் வார்த்தைகளாக மாத்திரம் இருக்கும் வரையில், இது ஒரு உடன்படிக்கையாக இருப்பதில்லை என்று நாம் கூறலாம்; இது நமது இருதயங்களில் எழுதப்படும்போது தான் ஒரு உடன்படிக்கையாகிறது (காண்க வசனம் 3).*

*பாடங்கள் அடிக்கடி பின்வரும் கேள்வியுடன் முடிகின்றன: "நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்கிறீர்களா?" சற்றே மாறுபட்ட ஒரு கேள்வியுடன் இந்தப் பாடத்தை முடிக்க நான் விரும்புகிறேன்: "நீங்கள் தேவனுடன் உடன்படிக்கை உறவில் இருக்கிறீர்களா?" தேவன் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார், ஆனால் அவரது நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா அல்லது ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா என்பது உங்களைப் பொறுத்ததாக உள்ளது.*

---

*குறிப்புகள்*

[1]*நான் போதிப்பவர்களுக்கு இந்தக்கூற்று உண்மையாக உள்ளது. உங்கள் மாணவர்களுக்குத் தேவையான வகையில் இந்தக் கருத்தைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [2]*எபிரெயர் 9:16, 17ஐத் தவிர, இவ்வார்த்தை "உடன்படிக்கை" என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று எனது போதகரான நீ லைட்ஃபூட் அவர்கள் நம்பினார்.* [3]*இவ்வார்த்தை " 'உயில் அல்லது வேறுவகையில் ஒரு சொத்தைப் பொருத்தமானவருக்குக் கொடுத்தல்' " என்பதைக் குறிக்கிறது* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 135). [4]Ibid., 430-31. [5]John Willis, *My Servants the Prophets,* vol. 3 (Abilene, Tex.: Biblical Research Press, 1972), 74.